## 7. மக்கட்பேறு

61. *பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற*

**பெற வேண்டிய பேறுகளில் சிறந்தது**
**பெற்றெடுக்கும் நல்ல நல்ல பிள்ளைகள்...!**
**பெரியதோர் அறிவிற் சிறந்த பிள்ளைகளாய்**
**பெற்றால் அதைவிட வேறு பேறு இல்லை !**

62. *எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்*

**பழியில்லாத பண்புக் குழந்தைகளை**
**பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்தால்**
**பல அடுக்குகளாய் வரும் ஏழு பிறப்பிற்கும்**
**பக்கத்தில் கூட நெருங்காது தீயவை !**

63. *தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்*
*தந்தம் வினையான் வரும்*

**தனது பொருளான மக்கட் செல்வம் எனும் பெருஞ்செல்வம்**
**தத்தமது ஊழ் வினையால் தான் வந்து**
**தனித்த செயல்களினால் விளையும் !**

64. *அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்*

**அமிழ்தத்தை விட இனிமையானது எதுவெனில்**
**‘அம்மா’ என்றழைக்கும் பிஞ்சுக் குழந்தைகளின்**
**அழகான சிறு பிஞ்சுக்கரத்தால்**
**அளாவப் பட்ட உணவுக் கூழ் !**

65. *மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்*
*சொற்கேட்டல் இன்பம் செவிக்கு*

**பெற்ற குழந்தைகளைத் தழுவி மகிழ்ந்தால்**
**பெற்ற உடம்பிற்கு இன்பம் !**
**பெற்ற குழந்தைகளின் மழலை மொழி கேட்டால் தான்**
**பெற்ற செவிகளுக்கு இன்பம் !**

66. *குழலினி தியாழினி தென்பதம் மக்கள்*
*மழலைச்சொல் கேளா தவர்*

**குழல் ஓசை இனிது என்பர்**
**குழல் போல் யாழ் இசையும் இனிது என்பர் – யார் ? தம்**
**குழந்தைகளின் மழலைச் சொல்லை செவி**
**கொடுத்துக் கேளாதவர் !**

67. *தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து*
*முந்தி இருப்பச் செயல்*

**தந்தை மகனுக்கு ஆற்றும் நல்லுதவி**
**தகைமை சால் அறிஞர்களின் அவையில்**
**தலைமைப் பண்போடு முதன்மையாய் வீற்றிருப்பதே !**

68. *தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது*

**தன்னை விட அறிவிற் சிறந்தவர்களாக**
**தம் மக்கள் விளங்கினால்**
**தனக்கு மட்டுமல்லாமல்**
**தரணியில் வாழும் உயிர்களுக்கெல்லாம் இனிமையே !**

69. *ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்*

**பெற்ற தாய்க்குத் தன் மகனை**
**பெற்ற போது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட**
**பெரு மகிழ்ச்சி 'சான்றோன் அவன்' எனப்**
**பெருமையுடன் ஊரார் சொல்லக் கேட்கும் பொழுது !**

70. *மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை*
*என்நோற்றான் கொல்லெனும் சொல்*

**இவன் தந்தை – மகனாக**
**இவனைப் பெற்றதற்கு என்ன தவம் செய்தானோ**
**என அவனைப் பிறர் புகழ்ந்து பாடுவது தான்**
**அவன் தந்தைக்கு அவன் செய்யும் கைம்மாறு !**